**செய்தி வெளியீடு எண்: 642** **நாள்: 11.09.2018**

# செய்தி வெளியீடு

ஆஸ்திரேலியாவின் தென்னிந்தியாவிற்கான துணைதூதர் திரு.மைக்கேல் கோஸ்டா அவர்கள், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சருடனான இன்றைய (11.09.2018) சந்திப்பின்போது கீழ்க்கண்ட விவரங்கள் குறித்து கலந்துரையாடினர்.

1. ஆஸ்திரேலியா தேசிய காட்சிக்கூடம் (National Gallery) தமிழகத்தில் உள்ள எழும்பூர் அருங்காட்சியகத்துடன் இணைந்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஏற்படுத்துதல்.

2. ஆஸ்திரேலிய பழங்குடியினர் குறித்த திரைப்பட விழாவினை சென்னையில் நடத்துதல்.

3. 2035–ஆம் ஆண்டிற்குள் இந்தியா–ஆஸ்திரேலியாவுக்கு இடையேயான பொருளாதாரத்தினை வலுப்படுத்துதல் சார்ந்த ஆய்வறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பான கலந்துரையாடல்.

4. தமிழகம் மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இடையேயான கலாச்சார பரிவர்த்தனைகளை ஏற்படுத்துதல்.

இச்சந்திப்பின்போது ஒருங்கிணைப்பாளர் திரு.கார்த்திகேயன் வைத்தீஸ்வரன் உடனிருந்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**